கடற்கரை கவியரங்கு – 603 நாள்: 04-07-2021

# காலம் எழுதிடும் கனவுகள்!

நெஞ்சக் குழியில், அந்த நினைவின் பதிவில்,
தஞ்சமாகிடும் சீர்மிகு தார்மீகக் கனவுகள்!
பஞ்சமின்றிப் பலகதைகள் நாளும் சொல்லும்!
வஞ்சமின்றியே மனமோதானும் பூட்டியே மகிழும்!

அஞ்சும் வாழ்வின் அவலம் இல்லாது,
கொஞ்சம் தானும் கூச்சம் கொள்ளாது,
மஞ்சம் இட்டே மனத்தினில் முகிழும்!
விஞ்சும் அறிவை வியப்பால் எழுதும்!

விருப்பம் போலே எழுந்து நிறையும்!
அருவியாய் மனத்தின் ஆற்றல் வளர்க்கும்!
குருவியாய் மனத்தில் கூவியும் மகிழும்!
அருமைக் கனவே அவலம் நீக்கும்!

அன்பின் வழியில் வாழ்வை நிகழ்த்திட,
துன்பம் இன்றித் தொடரும் பயணம்!
வன்மம் இன்றி, மனமும் நிறைய;
இன்பம் என்பதே வாழ்வைச் சூட,

இயன்நிலையாக வாழ்க்கை நகரும்!
பயன்தரும் கனவை பண்பால் விதைப்போம்!
வியப்பின்றி யாவும் விரும்பி அணைந்திட,
மயக்கமில் வாழ்வே அரங்கம் ஏறும்!

**கவிவளவன்,**
03-07-2021
(08.30 PM)